தலைப்பு 280 - கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய பொழிப்பு அறிக்கை கணகீட்டு உத்தியோகத்தரிற்கு 2019 மே 29 ஆந் திகதி வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 28 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்குபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கம் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்கள தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முதற்தடவையாக சமர்பிக்கப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்படவில்லை.

(ஆ) கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

நிதி நிலைமைக் சுற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | 2017 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம், 2017 திசம்பர் 31ல் உள்ளவாறு கணக்கில் காட்டப்பட்ட செயற்திட்ட மதிப்பீடு மற்றும் இணைய அடிப்படையிலான கண்காணிப்பு முறைமை என அழைக்கப்படகின்ற ரூபா.9,180,101.00 பெறுமதியான சொததொன்று எந்தவொரு அடிப்படையுமில்லாமல் கணக்கிலிரந்து அகற்றப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளிற்கமைவாக சொத்துகள் பதிவழிப்பானது மேற்கொள்ளப்பட வேண்டும். | 2017 திசம்பர் 31ல் காணப்பட்ட ரூபா 9,180,101 பெறுமதியுடைய செயற்திட்ட மதிப்பீடு மற்று இணைய அடிப்படையிலான கண்ணகாணிப்பு முறைமை 2019ம் ஆண்டிலும் தொடர்ச்சியாக கணக்குகளில் இருக்கும். |
| (ஆ) | ரூபா 15,476,452 பெறுமதியான நிதிரீதியில் அல்லாத சொத்துகள் ஏனைய அலுவலக உபகரணங்களாக வகைப்படுத்தப்பட்டள்ளன. ஆனால் சரியான | நிதி நிலமைக்கூற்றுகள் சமர்ப்பிக்கும் போது சுற்றறிகைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் மாதிரிகள் | எதிர்காலத்தில் சொத்துகள் வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

| | |
|---|---|
| சொத்துவகைகளான அலுவலக உபகரணம், கணணி உபகரணம் மற்றும் தளபாடம் ஆகியவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பயன்னடுத்தப்படவேண்டும். |

**1.6.2.** அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்று

பின்வரும் கணக்காய்வு அவதானிப்பகள் இது தொடர்பாக கண்டறியப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேவையிலிருந்த விலகிய அலுவலர் ஒருவரது கடன் நிலுவைத்தொகை ரூபா.139,921.00 மூன்றரை வருடங்களாக மீளப்பெறவில்லை. | தாபனவிதிக்கோவை அத்தியாயம் XXIVஆம் பிரிவு 5.4 ற்கமைவாக சேவையிலிருந்த விலகிய அலுவலர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | சேவையிலிருந்து விலகிய குறித்த அலுவலரிடமிருந்து நிலுவைக்கடன் தொகையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

1.6.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினுடைய நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தேசிய கணக்காய்வு சட்டத்திற்கமைவாக முதற்தடவையாக கணக்குகள் தயாரிக்கப்பட்டமையால் அடுத்த ஆண்டு முதல் நிதிக் கட்டுப்பாட்டிற்கான செயற்திறனான உள்ளக கட்டுப் பாட்டு முறைமையை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை வழங்குவதற்காக கணக்கீட்டு உத்தியோகத்தர் செயற்படுவார். |

தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.6.4. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணங்கள்<br>நிதிப்பிரமாணம் 880 | | நிதிப் பிரமாணம் 880ன் ஏற்பாடுகளிற்கு அமைவாக பிணைகள் சமர்ப்பிக்க வேண்டிய அலுவலர்களால் பிணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணங்களிற்கு இணங்க வேண்டும் | நிதிப் பிரமாண ஏற்பாடுகளிற்கு அமைவாக பிணைகள் சமர்ப்பிக்கபட்ட வேண்டிய அலுவலர்கள் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பார்கள். |
| (ஆ) | சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கைகள்<br>02/2017ம் மற்றும் 03/2018ம் இலக்க சுற்றறிக்கை. | | மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்ட மூன்று வாகனங்களின் உரிமை பதிவு செய்யப்படவில் | சுற்றறிக்கையின் தேவைப்படுகளிற்கமைவாக செயற்படவேண்டும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

லை.

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்விற்குரிய ஆண்டில் 1141 உள்நாட்டு செயற்திட்டங்கள் மற்றும் 257 வெளிநாட்டு செயற்திட்டங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக 1398 செயற்திட்டங்கள் காணப்பட்டது. அவற்றில் 1.86 வீதமான 26 கள பரீட்சிப்பு செற்பாடுகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது ஒரு மிகசிறிய அளவான செயற்பாடாகவே உள்ளது. | திட்டமிடும் போது செயற்திட்டங்கள் போதுமான அளவில் கண்காணிக்கப்படுவதை உறுதிப்படுத்தல். | செயற்திட்டங்கள் கண்காணிப்பதற்கு பல்வேறுபட்ட தந்திரோபாயங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறான கண்காணிப்பு தந்திரோபாயங்களில் ஒன்று களப் பரீட்சிப்பு. செயற்திட்ட கண்காணிப்பில் அதிக சிக்கல்களைக் கொண்ட செயற்திட்டங்களில் இவ்வாறான களப்பரீட்சிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையினால் செயற்திட்ட எண்ணிக்கைகள் அதிகமாக காணப்பட்ட போதிலும் ஆளணிப் பற்றாக்குறை மற்றும் குறுகிய காலப்பகுதி காரணமாக குறைவான களப் பரீட்சிப்புகளே மேற்கொள்ளப்பட்டன. |

## 3. மனித வள முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசம்பர் 31ம் திகதியில் அனுமதிக்கப்பட்ட ஆளணி 108 ஆக காணப்பட்ட போதிலும் 69 ஊளியர்கள் உண்மையாகவும் 39 வெற்றிட ஆளணியாகவும் காணப்பட்டது. அவ் | வெற்றிடங்களை நிரப்பவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேணடுடம். | பொது நிர்வாக அமைச்சிடம் வெற்றிடங்களிற்கான அலுவலர்களை நியமிப்பதற்கான கோரிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

வெற்றிட ஆளணியானது சிரேஸ்ட மட்டத்தில் 09 ஆகவம் மூன்றாம் மட்டத்தில் 02 ஆகவும் இரண்டாம் மட்டத்தில் 22 ஆகவும் ஆரம்ப மட்டத்தில் 06 அகவும் காணப்பட்டது.